மெட்ரோ ரயில் நிலையங்கள், தூண்களில்

# விதிமீறி போஸ்டர் ஒட்டினால் ₹1,000 அபராதம், 6 மாதம் சிறை

## நிர்வாகம் எச்சரிக்கை

**சென்னை, செப். 4:** சென்னையில் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளன. மெட்ரோ ரயில் நிலைய கட்டிடங்கள் மற்றும் தூண்களில் போஸ்டர்கள் மற்றும் விளம்பரங்கள் ஒட்டப்படுவதாக நிர்வாகத்திற்கு தொடர் புகார்கள் வந்தவண்ணம் இருந்தன. இது மெட்ரோ ரயில் கட்டிடங்களின் அழகுக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் கருதப்பட்டது.

அதன்படி, மெட்ரோ ரயில் நிலைய தூண்களில் போஸ்டர்கள் ஒட்ட கடந்த 2017ம் ஆண்டு நிர்வாகம் தடை விதித்தது. இருந்தாலும், பல மெட்ரோ ரயில் நிலையங்களின் கட்டிடங்கள் மற்றும் தூண்களில் தடையை மீறி போஸ்டர்கள் ஒட்டப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இதனால், நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் தொடர்ந்து தலைமை அலுவலகத்திற்கு வந்தன.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் தூண்களில் தடையை மீறி போஸ்டர்கள் மற்றும் விளம்பரங்கள் ஒட்டுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, தடையை மீறி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ரூ.1,000 அபராதம் அல்லது 6 மாத சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் எனவும் நிர்வாகம் எச்சரித்துள்ளது.